தமிழ் பேசும் டபிள்யுஎஸ்ஜபி குழுப்பிரிவு

**Workplace Safety Insurance Board**
200 Front Street West
Toronto, Ontario M5V 3J1

புரட்டாதி 05, 2012

அன்புள்ள WSIB,

தமிழ் பேசுகின்ற, பாதிக்கப்பட்ட தொழிலாளரான நாங்கள், தொழிலாளர் நட்டஈடு அமைப்பினைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும், அதனை மேலும் மேன்மைப்படுத்துவது எப்படி என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் கூட்டம் கூடுகின்றோம். எங்களது கலந்துரையாடல்களின் பொழுது நாங்கள் பல முக்கியமான பிரச்சனைப் பகுதியை (களை) அவதானித்தோம். அவற்றை நீக்குவதற்கு அல்லது அவற்றிற்கு மாற்றீட்டுத் தீர்வுகளைக் கொண்டுவருவதற்கு நீங்கள் எங்களுக்கு உதவுவீர்களென்று நாங்கள் நம்புகின்றோம். அந்தப் பிரச்சனைகள் ஆவன:

1) டபிள்யுஎஸ்ஜபி (தொழிலிடப் பாதுகாப்பு காப்புறுதிச் சபை)யிடம், அவர்களுக்கு உதவுவதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள் எனக் கேள்விப்பட்டோம். அப்படியானால் டபிள்யுஎஸ்ஜபி (WSIB) எங்களுடன் தொடர்பு (தொலை பேசி மூலம் அல்லது கடிதம் மூலம்) கொள்ளும் பொழுது, ஆங்கிலத்தில் மட்டுமே ஏன் தொடர்பு கொள்கின்றது. <u>அவர்களிடமிருக்கும் மொழி பெயர்ப்பாளர்களை நாங்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ள முடிந்தால், கடிதத்தின் சாராம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் டபிள்யுஎஸ்ஜபி யின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கும் எங்களுக்கு அது பேருதவியாக இருக்கும்.</u>

2) <u>டபிள்யுஎஸ்ஜபி பல மாற்றங்களை அண்மையிற் செய்துள்ளது. முறையீட்டு விண்ணப்ப நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது அவசியம் என்பது அதில் ஒன்றாகும். முறையீட்டு விண்ணப்ப நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல் அவசியம் என்பதை நாங்கள் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கின்றோம்.</u> எங்களது சமூக அங்கத்தவர்கள் அநேகர் பல வேலைகளைச் செய்கின்றார்கள். அத்துடன் அவர்கள் ஆபத்தான தொழில்களையும் செய்கின்றார்கள். தனிமனிதர் ஒருவர் பாதிக்கப்பட்டு, தொழில் செய்யமுடியாத நிலையடைந்தால் அதனால் முழுக்குடும்பமும் பாதிக்கப்படும். டபிள்யுஎஸ்ஜபி, நட்ட நிவாரணப் பணத்தை வெட்டி விடும் பொழுது, பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்புத் திட்டத் தொகையான ஆர்ஈஎஸ்பி, கடன் அட்டைகள், லைன் ஃஒவ் கிரடிற், ஆகிய மூலவளங்களில் இருந்து பணத்தை எடுத்தல், பிறரிடம் கடன் வாங்குதல் போன்றவற்றை உபயோகிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்படுகின்றது. குறிப்பிடத்தக்க அதிக அளவு மனத் தவிப்பு, அமைதியின்மை ஆகியவை எங்கள் குடும்பங்களில ஏற்படுவதற்கு இது காரணமாக அமைகின்றது. <u>இந்த நிவாரண நிதியை வெட்டுவதால் எங்களுக்கும் முக்கியமாக எங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்படுகின்ற பாதிப்பின் அளவினைக் குறைக்கக் கூடிய செயற்பாடு ஒன்று இருக்குமானால் அது எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். எங்களது முறைப்பாட்டு விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்கப்படும் வரை, அதற்காக நாங்கள் காத்திருக்கும் வேளையில் எங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படுதல் அவசியமாகும்.</u>

3) இருப்பதை இழக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் பிரேரணை – டபிள்யுஎஸ்ஜபிக்கு நீங்கள் உங்களது முறைப்பாட்டு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால், அவர்கள் உங்களது பிரச்சனையில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் பரிசீலிப்பார்கள்.. அத்துடன் உங்களுக்கு ஏற்கெனவே மற்றவர்களால் வழங்கப்பட்டிருக்கும் சலுகைகளைத் திருப்பி எடுத்து விடவும் கூடும். இப்படிச் செய்வதை, ஒரு பாதகமான அணுகு

முறையாகவும், காயம் அடைந்த தொழிலாளருக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் நிகழ்வாகவும் நாங்கள் பார்க்கின்றோம். டபிள்யுஎஸ்ஐபி அறிக்கைகளை ஏற்கெனவே வாசித்து இந்த வழக்கை நடத்துவதற்கு அனுமதித்து விட்டது. அதன் பின்னர், எப்படி அவர்கள் தாங்கள் ஏற்கெனவே அனுமதித்ததைத் திருப்பி எடுப்பதற்குத் தீர்மானிக்க முடியும்? அத்துடன் இந்தச் செயற்பாடு பாதிக்கப்பட்டோரைக் கட்டாயப்படுத்திப் பயமுறுத்துவதாகவும், டபிள்யுஎஸ்ஐபிக்கு விண்ணப்பித்தலை அபாயகரமானதாகவும் ஆக்கி விடும்.. இந்த சூழ்நிலைகளில் ஒருவரும் டபிள்யுஎஸ்ஐபிக்கு விண்ணப்பிக்க விரும்ப மாட்டார்கள். இறுதியாக இந்தச் செயற்பாடு காயமுற்றிருக்கும் தொழிலாளர் நட்ட ஈட்டினைப் பெறுவதைத் தடுப்பதன் மூலம், காயமடைந்தோர், தங்களது காயங்களால் ஏற்படுகின்ற உடல் வேதனையுடன், பாரிய மனவேதனைக்கும் ஆளாவதற்குக் காரணமாகிவிடும். டபிள்யுஎஸ்ஐபி ஏற்கெனவே அவர்களுக்குக் வழங்கியதைப் பணயம் வைக்கும்படி எப்படி அவர்களைக் கேட்க முடியும்? தனிப்பட்டோர் தங்களது விண்ணப்பிக்கும் உரிமைகளைப், பயத்தினாலும், தண்டனையினாலும் நிலைநாட்டத் தவறுவதற்குக் காரணமாக இருக்கின்ற இந்த நடவடிக்கை, அதிர்ச்சி அளிக்கக் கூடியதாகவும் அநியாயமானதாகவும் இருக்கின்றது.

4) நேர்முகச் விசாரணை, வாய்மொழி விசாரணை என்பவை ஒழிக்கப்படுகின்றன: நேர்முக விசாரணைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படாத 17 வகையான வழக்குகளின் பட்டியலொன்று இருக்கின்றது. இன்னும் அநேக வழக்குகள் எழுத்து மூலம் விண்ணப்பித்துத் தீர்ப்புக்களைப் பெற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகின்றன. நேரடியாகச் சென்று விண்ணப்பித்தல் நன்மை பயக்கக் கூடியது என நாங்கள் கண்டறிந்திருக்கின்றோம். அப்பொழுதுதான் நாங்கள் எங்களது நிலைமையை நன்கு விளக்கிக் கூறமுடியும். டபிள்யுஎஸ்ஐபி எங்களைக் கேள்வி கேட்பதற்கும், நாங்கள் மேலதிக விபரங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்கும் ஏற்ற சந்தர்ப்பம் அப்பொழுது ஏற்படும். மேலும் நேர்முக விசாரணையின் பொழுது, டபிள்யுஎஸ்ஐபி, எங்களது மெய்ப்பாட்டு அசைவுகள், எங்களது முகபாவங்கள், கஸ்டங்கள், எங்களது வேதனை உணர்வுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எங்கள் குழுவைச் சேர்ந்தவர்களில் அநேகமாக ஒருவரும் டபிள்யுஎஸ்ஐபியைச் சேர்ந்த ஒருவரையும் உரிய முறையிற் சந்தித்ததில்லை. நாங்கள் எங்களது விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பிக்காத பட்சத்தில் எங்களுக்குரிய நிவாரணம் வருடாதி வருடங்களாக நிராகரிக்கப்படுவதுடன் எங்களுக்கான தீர்மானத்தை எடுப்பவரை நாங்கள் சந்திக்க வாய்ப்பில்லாமலே போகலாம். இது நியாயமற்றது! ஒரு விண்ணப்ப அமைப்பு உண்மையான சாட்சியங்களைப் பற்றிய குறிப்புக்களை எடுத்தல் வேண்டும். நேருக்கு நேர் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலமே இதனைச் சிறப்பாகச் செய்யலாம். இந்த நடவடிககையில் உதவுவதற்கு மேலதிக விண்ணப்ப உத்தியோகத்தவர்களை டபிள்யுஎஸ்ஐபி அமர்த்துதல் அவசியமாகும்.

5) புதியதும் நீண்டதும் ஆன விண்ணப்பப் படிவங்கள்: நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பொழுது உங்கள் விண்ணப்பப் படிவம் சிறிதாக இல்லாமல் புதிய 2 பக்கங்களையுடைய இன்ரன்சன் ரு ஒப்ஜெக்ற் படிவமாக இருக்கப் போகின்றது, இரண்டு பக்கங்களையுடைய ஒப்ஜக்சன் படிவத்திற்குப் பதிலாக 3 பக்கங்களையுடைய ஒப்ஜக்சன படிவமாக இருக்கப் போகின்றது. முக்கியமாக ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு இந்தப் படிவங்கள் மேலும் சிக்கல்களை உண்டு பண்ணுகின்றன. இந்தப் படிவங்களை எப்படி நிரப்புவது என்பது பற்றி ஆங்கிலத்தில் விளக்குகின்ற 4 பக்கங்கள் ஒவ்வொரு படிவத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் படிவங்கள் விண்ணப்பதாரர்களுக்கு வெறுப்பையும் அலுப்பையும் உண்டு பண்ணும். அத்துடன் இந்தப் படிவங்களை விளங்கிக் கொள்வதற்கு உதவி பெறுவது அவசியமாக இருப்பதால் கால தாமதமும் ஏற்படும் இந்த விண்ணப்பப் படிவங்கள் இலகுவானவையல்ல. இவற்றை எங்களுக்கு விளக்கிக் கூறி உதவுவதற்கு பிரதிநிதிகள் தேவைப்படுகின்றார்கள். பணம், சம்பளம், அல்லது நிவாரணம் பெறாமல் எங்களுக்கு உதவக் கூடிய பிரதிநிதிகள் போதுமான அளவு இல்லாதபடியாலும், சட்டப் பிரதிநிதிகளுக்குக் கொடுப்பதற்குப் பண வசதி எங்களிடம் இல்லாதபடியாலும் இது ஒரு பிரச்சனை ஆகின்றது. தற்போதைய அமைப்பு முறைப்பாட்டு விண்ணப்பத்தை ஒழுங்கு படுத்துவதற்கு மிகவும் நீண்ட காலததை எடுக்கின்றது என்றால் டபிள்யுஎஸ்ஐபி நீண்ட பல படிவங்களை கொண்டுவருவதன் மூலம் மேலும் காலத்தை விரயம் செய்கின்றது. இவற்றை விட்டு விட்டு இந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த

வேண்டில் டபிள்யுஎஸ்ஐபி இதனை இலகுவானதாகவும், கெடுபிடி குறைந்நதாகவும் ஆக்குதல் வேண்டும்.

முடிவுரையாக நாங்கள் சொல்வதென்ன வெனறால், எங்களது முறையீட்டு விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலனைக்கு எடுக்கப்படுவதற்கு ஒரு நல்ல வழிவகையிருப்பது அவசியம். ஆனால் இந்த நடவடிக்கையிற் சம்பந்தப்பட்ட நபர்கள், அதிக கஸ்டங்களையும் மனப்பதட்டங்களையும் அடைவதற்கு இந்த வழிவகையே காரணமாகிவிடக்கூடாது. நாங்கள் காயங்களைப் பட்டு அவற்றைக் குணப்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றவர்கள் என்பதைத் தயவு செய்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த நட்டஈட்டு நிவாரணம் பெறும் நடவடிக்கையை அதிக கஸ்டமானதாக்கினால் நாங்கள் எப்படி சுகமடைந்து எங்கள் கால்களிற் திரும்பவும் நிற்க முடியும்? எங்கள் குரல்கள் உங்களின் செவிகளில் விழவேண்டும், அத்துடன் அவற்றிற்கு மதிப்பேற்படுதல் வேண்டும் என்பதற்காக நாங்கள் உங்களுக்கு இதனை இன்று எழுதுகின்றோம். நாங்கள் இனிமேலும் ஒதுங்கி நிற்க மாட்டோம்.

ஒருமைப்பாட்டுடன் (In Solidarity),

தமிழ் பேசும் டபிள்யுஎஸ்ஐபி குழுப்பிரிவு (The Tamil Speaking WSIB Group )

தமிழ் பேசும் டபிள்யுஎஸ்ஐபி குழுப்பிரிவு

லின்டா ஜெவ்றி, எம்பிபி,
தொழில் மந்திரி
யூனிவசிற்றி அவன்யு, 14ம் மாடி
டொரண்டோ, ஒன்ராறியோ எம்7ஏ 1ரி7

புரட்டாதி 05, 2012

அன்புள்ள மதிப்பிற்குரிய லின்டா ஜெவ்றிஇ,

தமிழ் பேசுகின்ற, பாதிக்கப்பட்ட தொழிலாளரான நாங்கள், தொழிலாளர் நட்டஈடு அமைப்பினைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும், அதனை மேலும் மேன்மைப்படுத்துவது எப்படி என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகவும் கூட்டம் கூடுகின்றோம். எங்களது கலந்துரையாடல்களின் பொழுது நாங்கள் பல முக்கியமான பிரச்சனைப் பகுதியை (களை) அவதானித்தோம். அவற்றை நீக்குவதற்கு அல்லது அவற்றிற்கு மாற்றீட்டுத் தீர்வுகளைக் கொண்டுவருவதற்கு நீங்கள் எங்களுக்கு உதவுவீர்களென்று நாங்கள் நம்புகின்றோம். அந்தப் பிரச்சனைகள் ஆவன:

1) டபிள்யுஎஸ்ஐபி (தொழிலிடப் பாதுகாப்பு காப்புறுதிச் சபை)யிடம், அவர்களுக்கு உதவுவதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள் எனக் கேள்விப்பட்டோம். அப்படியானால் டபிள்யுஎஸ்ஐபி (WSIB) எங்களுடன் தொடர்பு (தொலை பேசி மூலம் அல்லது கடிதம் மூலம்) கொள்ளும் பொழுது, ஆங்கிலத்தில் மட்டுமே ஏன் தொடர்பு கொள்கின்றது. அவர்களிடமிருக்கும் மொழி பெயர்ப்பாளர்களை நாங்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ள முடிந்தால், கடிதத்தின் சாராம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் டபிள்யுஎஸ்ஐபி யின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கும் எங்களுக்கு அது பேருதவியாக இருக்கும்.

2) டபிள்யுஎஸ்ஐபி பல மாற்றங்களை அண்மையிற் செய்துள்ளது. முறையீட்டு விண்ணப்ப நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது அவசியம் என்பது அதில் ஒன்றாகும். முறையீட்டு விண்ணப்ப நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல் அவசியம் என்பதை நாங்கள் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கின்றோம். எங்களது சமூக அங்கத்தவர்கள் அநேகர் பல வேலைகளைச் செய்கின்றார்கள். அத்துடன் அவர்கள் ஆபத்தான தொழில்களையும் செய்கின்றார்கள். தனிமனிதர் ஒருவர் பாதிக்கப்பட்டு, தொழில் செய்யமுடியாத நிலையடைந்தால் அதனால் முழுக்குடும்பமும் பாதிக்கப்படும். டபிள்யுஎஸ்ஐபி, நட்ட நிவாரணப் பணத்தை வெட்டி விடும் பொழுது, பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்புத் திட்டத் தொகையான ஆர்ஈஎஸ்பி, கடன் அட்டைகள், லைன் ஃஒவ் கிரடிற், ஆகிய மூலவளங்களில் இருந்து பணத்தை எடுத்தல், பிறரிடம் கடன் வாங்குதல் போன்றவற்றை உபயோகிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்படுகின்றது. குறிப்பிடத்தக்க அதிக அளவு மனத் தவிப்பு, அமைதியின்மை ஆகியவை எங்கள் குடும்பங்களில ஏற்படுவதற்கு இது காரணமாக அமைகின்றது. இந்த நிவாரண நிதியை வெட்டுவதால் எங்களுக்கும் முக்கியமாக எங்கள் குடும்பத்தினருக்கும் ஏற்படுகின்ற பாதிப்பின் அளவினைக் குறைக்கக் கூடிய செயற்பாடு ஒன்று இருக்குமானால் அது எங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். எங்களது முறைப்பாட்டு விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுக்கப்படும் வரை, அதற்காக நாங்கள் காத்திருக்கும் வேளையில் எங்களுக்கு நிவாரணப் பணம் வழங்கப்படுதல் அவசியமாகும்.

3) இருப்பதை இழக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் பிரேரணை – டபிள்யுஎஸ்ஐபிக்கு நீங்கள் உங்களது முறைப்பாட்டு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால், அவர்கள் உங்களது பிரச்சனையில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் பரிசீலிப்பார்கள்..

அத்துடன் உங்களுக்கு ஏற்கெனவே மற்றவர்களால் வழங்கப்பட்டிருக்கும் சலுகைகளைத் திருப்பி எடுத்து விடவும் கூடும். இப்படிச் செய்வதை, ஒரு பாதகமான அணுகு முறையாகவும், காயம் அடைந்த தொழிலாளருக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் நிகழ்வாகவும் நாங்கள் பார்க்கின்றோம். டபிள்யுஎஸ்ஐபி அறிக்கைகளை ஏற்கெனவே வாசித்து இந்த வழக்கை நடத்துவதற்கு அனுமதித்து விட்டது. அதன் பின்னர், எப்படி அவர்கள் தாங்கள் ஏற்கெனவே அனுமதித்ததைத் திருப்பி எடுப்பதற்குத் தீர்மானிக்க முடியும்? அத்துடன் இந்தச் செயற்பாடு பாதிக்கப்பட்டோரைப் கட்டாயப்படுத்திப் பயமுறுத்துவதாகவும், டபிள்யுஎஸ்ஐபிக்கு விண்ணப்பித்தலை அபாயகரமானதாகவும் ஆக்கி விடும்.. இந்த சூழ்நிலைகளில் ஒருவரும் டபிள்யுஎஸ்ஐபிக்கு விண்ணப்பிக்க விரும்ப மாட்டார்கள். இறுதியாக இந்தச் செயற்பாடு காயமுற்றிருக்கும் தொழிலாளர் நட்ட ஈட்டினைப் பெறுவதைத் தடுப்பதன் மூலம், காயமடைந்தோர், தங்களது காயங்களால் ஏற்படுகின்ற உடல் வேதனையுடன், பாரிய மனவேதனைக்கும் ஆளாவதற்குக் காரணமாகிவிடும். டபிள்யுஎஸ்ஐபி ஏற்கெனவே அவர்களுக்குக் வழங்கியதைப் பணயம் வைக்கும்படி எப்படி அவர்களைக் கேட்க முடியும்? <u>தனிப்பட்டோர் தங்களது விண்ணப்பிக்கும் உரிமைகளைப், பயத்தினாலும், தண்டனையினாலும் நிலைநாட்டத் தவறுவதற்குக் காரணமாக இருக்கின்ற இந்த நடவடிக்கை, அதிர்ச்சி அளிக்கக் கூடியதாகவும் அநியாயமானதாகவும் இருக்கின்றது.</u>

4) <u>நேர்முகச் விசாரணை, வாய்மொழி விசாரணை என்பவை ஒழிக்கப்படுகின்றன:</u> நேர்முக விசாரணைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படாத 17 வகையான வழக்குகளின் பட்டியலொன்று இருக்கின்றது. இன்னும் அநேக வழக்குகள் எழுத்து மூலம் விண்ணப்பித்துத் தீர்ப்புக்களைப் பெற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகின்றன. நேரடியாகச் சென்று விண்ணப்பித்தல் நன்மை பயக்கக் கூடியது என நாங்கள் கண்டறிந்திருக்கின்றோம். அப்பொழுதுதான் நாங்கள் எங்களது நிலைமையை நன்கு விளக்கிக் கூறமுடியும். டபிள்யுஎஸ்ஐபி எங்களைக் கேள்வி கேட்பதற்கும், நாங்கள் மேலதிக விபரங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்கும் ஏற்ற சந்தர்ப்பம் அப்பொழுது ஏற்படும். மேலும் நேர்முக விசாரணையின் பொழுது, டபிள்யுஎஸ்ஐபி, எங்களது மெய்ப்பாட்டு அசைவுகள், எங்களது முகபாவங்கள், கஸ்டங்கள், எங்களது வேதனை உணர்வுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எங்கள் குழுவைச் சேர்ந்தவர்களில் அநேகமாக ஒருவரும் டபிள்யுஎஸ்ஐபியைச் சேர்ந்த ஒருவரையும் உரிய முறையிற் சந்தித்ததில்லை. நாங்கள் எங்களது விண்ணபத்தை நேரடியாகச் சமர்ப்பிக்காத பட்சத்தில் எங்களுக்குரிய நிவாரணம் வருடாதி வருடங்களாக நிராகரிக்கப்படுவதுடன் எங்களுக்கான தீர்மானத்தை எடுப்பவரை நாங்கள் சந்திக்க வாய்ப்பில்லாமலே போகலாம். இது நியாயமற்றது! <u>ஒரு விண்ணப்ப அமைப்பு உண்மையான சாட்சியங்களைப் பற்றிய குறிப்புக்களை எடுத்தல் வேண்டும். நேருக்கு நேர் சந்தித்து கலந்துரையாடுவதன் மூலமே இதனைச் சிறப்பாகச் செய்யலாம். இந்த நடவடிககையில் உதவுவதற்கு மேலதிக விண்ணப்ப உத்தியோகத்தவர்களை டபிள்யுஎஸ்ஐபி அமர்த்துதல் அவசியமாகும்.</u>

5) <u>புதியதும் நீண்டதும் ஆன விண்ணப்பப் படிவங்கள்:</u> நீங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பொழுது உங்கள் விண்ணப்பப் படிவம் சிறிதாக இல்லாமல் புதிய 2 பக்கங்களையுடைய இன்ரன்சன் ரு ஒப்ஜெக்ற் படிவமாக இருக்கப் போகின்றது, இரண்டு பக்கங்களையுடைய ஒப்ஜக்சன் படிவத்திற்குப் பதிலாக 3 பக்கங்களையுடைய ஒப்ஜக்சன படிவமாக இருக்கப் போகின்றது. முக்கியமாக ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு இந்தப் படிவங்கள் மேலும் சிக்கல்களை உண்டு பண்ணுகின்றன. இந்தப் படிவங்களை எப்படி நிரப்புவது என்பது பற்றி ஆங்கிலத்தில் விளக்குகின்ற 4 பக்கங்கள் ஒவ்வொரு படிவத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் படிவங்கள் விண்ணப்பதாரர்களுக்கு வெறுப்பையும் அலுப்பையும் உண்டு பண்ணும். அத்துடன் இந்தப் படிவங்களை விளங்கிக் கொள்வதற்கு உதவி பெறுவது அவசியமாக இருப்பதால் கால தாமதமும் ஏற்படும் இந்த விண்ணப்பப் படிவங்கள் இலகுவானவையல்ல. இவற்றை எங்களுக்கு விளக்கிக் கூறி உதவுவதற்கு பிரதிநிதிகள் தேவைப்படுகின்றார்கள். பணம், சம்பளம், அல்லது நிவாரணம் பெறாமல் எங்களுக்கு உதவக் கூடிய பிரதிநிதிகள் போதுமான அளவு இல்லாதபடியாலும், சட்டப் பிரதிநிதிகளுக்குக் கொடுப்பதற்குப் பண வசதி எங்களிடம் இல்லாதபடியாலும் இது ஒரு பிரச்சனை ஆகின்றது. தற்போதைய அமைப்பு முறைப்பாட்டு விண்ணப்பத்தை ஒழுங்கு படுத்துவதற்கு மிகவும் நீண்ட காலததை எடுக்கின்றது என்றால் டபிள்யுஎஸ்ஐபி நீண்ட பல படிவங்களை கொண்டுவருவதன் மூலம் மேலும் காலத்தை

விரயம் செய்கின்றது. இவற்றை விட்டு விட்டு இந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டில் டபிள்யுஎஸ்ஐபி இதனை இலகுவானதாகவும், கெடுபிடி குறைந்ததாகவும் ஆக்குதல் வேண்டும்.

முடிவுரையாக நாங்கள் சொல்வதென்ன வெனறால், எங்களது முறையீட்டு விண்ணப்பங்கள் விரைவாகப் பரிசீலனைக்கு எடுக்கப்படுவதற்கு ஒரு நல்ல வழிவகையிருப்பது அவசியம். ஆனால் இந்த நடவடிக்கையிற் சம்பந்தப்பட்ட நபர்கள், அதிக கஸ்டங்களையும் மனப்பதட்டங்களையும் அடைவதற்கு இந்த வழிவகையே காரணமாகிவிடக்கூடாது. நாங்கள் காயங்களைப் பட்டு அவற்றைக் குணப்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றவர்கள் என்பதைத் தயவு செய்து ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த நட்டஈட்டு நிவாரணம் பெறும் நடவடிக்கையை அதிக கஸ்டமானதாக்கினால் நாங்கள் எப்படி சுகமடைந்து எங்கள் கால்களிற் திரும்பவும் நிற்க முடியும்? எங்கள் குரல்கள் உங்களின் செவிகளில் விழவேண்டும், அத்துடன் அவற்றிற்கு மதிப்பேற்படுதல் வேண்டும் என்பதற்காக நாங்கள் உங்களுக்கு இதனை இன்று எழுதுகின்றோம். நாங்கள் இனிமேலும் ஒதுங்கி நிற்க மாட்டோம்.

ஒருமைப்பாட்டுடன் (In Solidarity),

தமிழ் பேசும் டபிள்யுஎஸ்ஐபி குழுப்பிரிவு (The Tamil Speaking WSIB Group )

Tamil Speaking WSIB Group

Linda Jeffrey, MPP
Minister of Labour
400 University Avenue, 14th Floor
Toronto ON M7A 1T7

September 05, 2012

Dear Honourable Linda Jeffrey

We are a group of Tamil speaking injured workers that meet to learn about the workers' compensation system and discuss ways in which to make it better. Over the course of our discussions we have come to identify several key problem area(s) which we hope you will assist us in remedying or finding alternative solutions to:

1) We have heard that the WSIB (Workplace Safety Insurance Board) have interpreters available to assist them, we would like to know why we are only contacted by WSIB in English (whether it is be by telephone or letter). <u>It would greatly assist us in understanding the contents of the letter and promptly responding to WSIB's requests if we could access the interpreters they have available.</u>

2) <u>WSIB has made recent changes, one of them being the need to speed up the appeal process. We are in full agreement that speeding up the appeal process is important.</u> Most of our community members have several jobs and are in precarious states of employment whereby the whole family is affected when an individual is injured and unable to work. When WSIB cuts off compensation we have to dip into other resource pools - primarily the children's RESP funds, credit cards, line of credit, borrow from other persons etc. This causes a significant strain and tension on our families. <u>It would be helpful to have a process whereby the impact of the cuts can be lessened on our selves and more importantly our families. We need to be compensated while we are waiting for our appeal to be heard.</u>

3) <u>Downside risk proposal – if you appeal the WSIB will review other decisions in your case and may take back benefits already given to you.</u> We find this to be a negative approach and to have serious consequences on injured workers. WSIB has already read the reports and allowed the case, how do they then decide to take back what they have already decided to allow? Furthermore, this process is intimidating as the WSIB are making it very risky to appeal, in these

circumstances no one would want to appeal. Finally, this will cause more grief and suffering to someone who is already in pain from their injuries and being denied compensation. How do you ask someone to risk giving up what the WSIB has already given them? This is egregious and unfair as individuals are unable to exercise their rights to appeal because of fear and punishment.

4) Eliminating in-person / oral hearings: there is a list of 17 types of cases that will not be allowed to go to an in-person hearing. Many other cases will be under pressure to be decided by a written appeal. We find that going to an appeal in person is beneficial. We can explain our situation better, the WSIB can ask questions and we have the opportunity to provide more details. Furthermore, the WSIB has opportunities in an in person hearing to recognize our body language, gestures, difficulties, emotional pain etc. In our group, almost no one has ever actually met someone from the WSIB in person, if we cannot present our appeal in person we can be denied compensation for years and never meet the person who makes the decision, this is not fair! An appeal system must take note of the actual evidence and this is done best in a face to face discussion. WSIB needs to hire more appeals personnel to assist in this process.

5) New and longer forms: instead of a note that you want to appeal there will be a new 2 page Intention to Object form; instead of the 2 page Objection Form there will be a 3 page Objection Form. These forms add complications, especially for people who are not literate in English. Each form has 4 pages of instructions in English about how to fill in the form, these forms will produce frustration and delay because people will need to get help to understand what to do. These forms are not simple and we will need representatives to help us; this is a problem because there are not enough representatives who can assist us without charge; without wages or compensation we cannot afford to pay for legal representatives! If the present system to arrange an appeal is taking too long, WSIB will only make it longer by adding more and longer forms – to speed up the process WSIB will need to make it simpler and less bureaucratic.

In conclusion, we need a better way to get appeals heard more quickly but not in a way that will create more hardship and tension to the parties involved in the process. Please remember that we have sustained injuries and are trying to recover. If the process is made to be more difficult than how can we recover and get back on our feet? We are writing to you today to have our voices heard and recognized; we will no longer stand aside.

In Solidarity,

The Tamil Speaking WSIB Group